**சுருக்கம்**

அலுவலக நடைமுறை – அலுவலக ஆணை, கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் கிறித்துவ ஆண்டுக்கு நேரான தமிழ் ஆண்டு, திங்கள், நாள், திருவள்ளுவர் ஆண்டு பயன்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை**

அரசாணை (நிலை) எண். 158

நாள் : 08.11.2012
நந்தன, ஐப்பசி 23,
திருவள்ளுவர் ஆண்டு – 2043

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.91, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி–ஏ) துறை, நாள் 03.02.1981.
2. அரசாணை (நிலை) எண்.70, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 09.04.2008.
3. தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்.300, நாள் 05.09.2011.

*********

**ஆணை :**

பார்வை 1–ல் காணும் அரசாணையில், அலுவலக ஆணை, கடிதங்கள் மற்றும் ஏனைய அரசு வெளியீடுகளில் கிறித்துவ ஆண்டுக்கு நேரான தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டது.

2) பார்வை 2–ல் காணும் அரசாணையில், அரசு ஆணைகள், தமிழ்நாடு அரசிதழ், அரசு கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் இனிவரும் காலங்களில் "சர்வஜித்" என்ற தமிழ் ஆண்டினை நீக்கியும், பிரபவ முதல் அட்சய வரை உள்ள அறுபது ஆண்டுகளின் பெயர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், கிறித்துவ ஆண்டுக்கு நிகராகத் தமிழ் திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) பார்வை 3–ல் காணும் தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (சாற்றுரை) சட்டம் 2008 (சட்டம் 2/08)–ஐ இரத்து செய்து தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (சாற்றுரை) நீக்கச் சட்டம்–2008 (சட்டம் 14/2011)–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4) எனவே, இனிவரும் காலங்களில் அரசு ஆணைகள், தமிழ்நாடு அரசிதழ், அரசு கடிதங்கள் மற்றும் ஏனைய வெளியீடுகளில் இது முதற்கொண்டு கிறித்துவ ஆண்டுடன் தமிழ் ஆண்டு, திங்கள், நாள், திருவள்ளுவர் ஆண்டை பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ம. குற்றாலிங்கம்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர் :
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை–9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
அனைத்து துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் உட்பட.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

நகல் :
அனைத்து பிரிவுகள் / அதிகாரிகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
பணி மேலாளர், தமிழ்நாடு அரசு மைய அச்சகம், சென்னை–79.
செயலாளரின் தனிச்செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர்.

4. அதன்படி அரசு அலுவலகங்களில் தற்போதுள்ள பணி நேரத்தினை நாள்தோறும் ½ மணி நேரம் கூடுதலாக்கி அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு மீண்டும் வாரத்தில் 5 நாட்கள் வேலை நாட்களாக அதாவது எல்லா சனிக் கிழமைகளும் ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களாக அறிவித்து அரசு ஆணை வெளியிடுகிறது. தவிர எல்லா அரசு அலுவலகங்களுக்கும் 12.2.90 முதல் பணி நேரம் காலை 9.45 முதல் மாலை 5.45 வரை என மாற்றி அமைத்தும் ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். எம். ராஜேந்திரன்
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர் :—

அனைத்து செயலகத் துறைகள், சென்னை—9.
அனைத்து தலைமைத் துறைகள், ~~சென்னை—9~~.
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
குற்றவியல் நீதிபதிகள்.
பதிவாளர், உயர் நீதிமன்றம், சென்னை—104.
செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழு, சென்னை—2.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை—3.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை—5.
காவல் துறை ஆணையர், சென்னை—8.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு, தெற்கு, கிழக்கு) சென்னை.
அனைத்து தமிழ் நாடு அரசு நிறுவனங்கள்/வாரியங்கள்.
மாநில கணக்காயர், சென்னை—18/சென்னை—9/சென்னை—35.

நகல் :—

இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை—9.
செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை—9.
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை—9.

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

[illegible] 8/2/90
பிரிவு அலுவலர்.